உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# படைவேட்டுப் புராணம்.

இஃது

ஆரணி ஜாகீர் காமக்கூர்

தமிழ் வித்துவான்

## கா. மு. சுந்தர முதலியாரால்

வடமொழியிலிருந்து

மொழிபெயர்த் தெழுதப்பட்டு

ஆரணி:

அமெரிக்கன் ஆர்காட் மிஷன் அச்சுக்கூடத்தில்,

பதிப்பிக்கப்பட்டது.

சக்கிலஷூல ஆடிமீ

1929

ரிஜிஸ்தர் செய்தது] [விலை அணா 2.

உ

கணபதிதுணை.

# முகவுரை.

படைவேடு என்பது தொண்டைநாட்டில் கீழ்க்கடலுக்கு மேற்கே ஏழுயோசனை தூரத்தில் கமண்டல நதிக்கரையில் உள்ளதும், பல நூற்களால் புகழ்ப்பெற்றுப் புராதனமாக விளங்குவதும், குண்டலிபுரம், ஸேனுஹதம் என்னும் பெயர்கொண்டதுமாகிய ஒருமாரியம்மன் தலம். இது முன்னே பெரிய பட்டணமாயிருந்து, மண்மாரி பெய்யப்பெற்று, இப்போது காடாய்விளங்குகின்றது. ஆயிரத்தெட்டுச் சிவாலயங்களையும், நூற்றெட்டு விஷ்ணுவாலயங்களையும், மிகவும் பிரசித்தமான ஸ்ரீ இரேணுகாம்பாள் ஆலயத்தையும், சாமுண்டீஸ்வரி யாலயத்தையும், ஜமதக்கினி முனிவர் ஆசிரமத்தையும் உடையது. இவைகளுள் ஸ்ரீ இரேணுகாம்பாள் சரித்திரம் சூதமுனிவர் சௌனகாதி முனிவர்களுக்குச் சொன்னதாக விவஸ்வான் என்னும் அரசனுக்கு வசிஷ்ட முனிவரால் சொல்லப்படுவது. இப்புராணம் ஸ்ரீ இரேணுகாம்பாள் வரலாற்றையும், அவ்வம்மையாருக்கு இரண்டுவடிவம் வந்ததையும், அம்மை வார்த்தலையும், பச்சரிசிமாவும் பானகமும் நிவேதிப்பதையும், இராமசாமி கோயில், அநுமந்தராயர் கோயில்களின் வரலாறுகளையும் விளங்கக் கூறுகின்றது. இதை ஷை தேவஸ்தான அருச்சகர் ஸ்ரீமத் கெங்காதர குருக்களவர்கள் வேண்டிக்கொண்டபடி, மூஞ்சூர்ப்

பட்டு ஸ்ரீமத்சுந்தரசாஸ்திரியாரவர்கள் எழுதிவைத்திருந்த வடமொழிப் பிரதியைக்கொண்டு தமிழில் வசனமாக எழுதி 12-5-1902ல் மேற்படி குருக்களவர்களிடங் கொடுத்தேன். அவர்கள் சிலநாள் அச்சிடாமல் வைத்திருந்து சுமார் பதினைந்து வருடங்களுக்குமுன் காலஞ்சென்றூர்கள். நிற்க, முன்னே சில மாறுபாட்டுடன் வெளிவந்த இப்புராண வசனம் இப்போது கிடைப்பது அரிதாதலாலும், பலரும் படிக்க விரும்புவதாலும், என்னைப்பல அன்பர்கள் கண்டபோதெல்லாந் தூண்டிக்கொண்டிருந்ததாலும், இதைச் சுருக்கியும் விளக்கியும் எளிய நடையில் வரைந்து வெளியிட்டிருக்கின்றேன். குற்றங்களிருப்பின் அவைகளைக்களைந்து குணத்தை மாத்திரங்கொள்ள வேண்டுகின்றேன்.

சுக்கிலஹூ ஆடிமீ
காமக்கூர்

இங்ஙனம்,
மு. சுந்தரன்.

உ

கணபதி துணை.

# முகவுரை.

---

படைவேடு என்பது தொண்டைநாட்டில் கீழ்க்கடலுக்கு மேற்கே ஏழுயோசனை தூரத்தில் கமண்டல நதிக்கரையில் உள்ளதும், பல நூற்களால் புகழப்பெற்றுப் புராதனமாக விளங்குவதும், குண்டலிபுரம், ஸேனுஹதம் என்னும் பெயர்கொண்டதுமாகிய ஒருமாரியம்மன் தலம். இது முன்னே பெரிய பட்டணமாயிருந்து, மண்மாரி பெய்யப்பெற்று, இப்போது காடாய்விளங்குகின்றது. ஆயிரத்தெட்டுச் சிவாலயங்களையும், நூற்றெட்டு விஷ்ணுவாலயங்களையும், மிகவும் பிரசித்தமான ஸ்ரீ இரேணுகாம்பாள் ஆலயத்தையும், சாமுண்டீஸ்வரியாலயத்தையும், ஜமதக்கினி முனிவர் ஆசிரமத்தையும் உடையது. இவைகளுள் ஸ்ரீ இரேணுகாம்பாள் சரித்திரம் சூதமுனிவர் சௌனகாதி முனிவர்களுக்குச் சொன்னதாக விவஸ்வான் என்னும் அரசனுக்கு வசிஷ்டமுனிவரால் சொல்லப்படுவது. இப்புராணம் ஸ்ரீ இரேணுகாம்பாள் வரலாற்றையும், அவ்வம்மையாருக்கு இரண்டுவடிவம் வந்ததையும், அம்மை வார்த்தலையும், பச்சரிசிமாவும் பானகமும் நிவேதிப்பதையும், இராமசாமி கோயில், அனுமந்தராயர் கோயில்களின் வரலாறுகளையும் விளங்கக் கூறுகின்றது. இதை ஷை தேவஸ்தான அருச்சகர் ஸ்ரீமத் கெங்காதர குருக்களவர்கள் வேண்டிக்கொண்டபடி, மூஞ்சூர்ப்

பட்டு ஸ்ரீமத்சுந்தரசாஸ்திரியாரவர்கள் எழுதிவைத்திருந்த வடமொழிப் பிரதியைக்கொண்டு தமிழில் வசனமாக எழுதி 12–5–1902ல் மேற்படி குருக்களவர்களிடங் கொடுத்தேன். அவர்கள் சிலநாள் அச்சிடாமல் வைத்திருந்து சுமார் பதினைந்து வருடங்களுக்குமுன் காலஞ்சென்றார்கள். நிற்க, முன்னே சில மாறுபாட்டுடன் வெளிவந்த இப்புராண வசனம் இப்போது கிடைப்பது அரிதாதலாலும், பலரும் படிக்க விரும்புவதாலும், என்னைப்பல அன்பர்கள் கண்டபோதெல்லாந் தூண்டிக்கொண்டிருந்ததாலும், இதைச் சுருக்கியும் விளக்கியும் எளிய நடையில் வரைந்து வெளியிட்டிருக்கின்றேன். குற்றங்களிருப்பின் அவைகளைக்களைந்து குணத்தை மாத்திரங்கொள்ள வேண்டுகின்றேன்.

| | |
|---|---|
| சுக்கிலஹு ஆடிமீ | இங்ஙனம், |
| காமக்கூர் | மு. சுந்தரன். |

---

உ

# சிறப்புப்பாயிரம்.

---

திருக்கைலாய பரம்பரைத் திருக்கோவலூராதீனம்
திருப்பாதிரிப்புலியூர், ஆரணி திருமலைசமுத்திரம்
இவ்விடங்களிலுள்ள

ஸ்ரீ ஞானியார் மடாலயத்துளெழுந்தருளியிருக்கும்
**ஸ்ரீமத்-சிவசண்முக மெய்ஞ்ஞான
சிவாசாரிய சுவாமிகள் அவர்கள்**
திருவாய்மலர்ந்தருளியவை.

---

எழுசீர் ஆசிரியம்.

1. தக்கவர் வதியுந் தொண்டைநன் னாட்டிற்
சற்சனர்க் குறைவிட மாகி

மிக்ககா மக்கூர் வதிந்திடு சீலன்
விதுவணி சடிலமா தேவன்

பக்கமா ரம்மை பதயுக ளத்திற்
பத்திசெய் பரம்பரைச் சைவன்

எக்கலை யினையும் வழுவறக் கற்றோன்
எழில்செய்சுந் தரப்பெயர்ப் புலவன்

2. தன்னிடம் வந்த மாணவர்க் கெல்லாந்
தமிழ்ச்சுவை தோன்றுமா றுரைத்துப்

பன்னுபன் னூலு முளங்கொளப் பயிற்றும்
பண்பினிற் சிறந்திடு பெரியோன்

முன்னூறு நலங்க ளெய்தினர்க் கருளு
முதல்விகல் விரேணுகை தேவி

மன்னியே வாழு கற்படை வேட்டு
மாபுரா ணந்தனைத் தமிழில்

3. மொழிபெயர்த் தச்சி லிலங்கிடச் செய்தான்
முழுத்தமி ழுணர்ந்தவர் விரும்ப

வழிவழி யடிமை செய்பவர்ப் புரக்கும்
வள்ளிநா யகன்குக னருளாற்

பழியகன் றுயர்ந்த செல்வமுஞ் சால்பும்
பகர்வளம் பலவுமே பெற்று

மொழிபல வாண்டும் வாழ்கவப் புலவன்
மொழிதமிழ்ப் புராணமும் வாழி.

உ

கணபதி துணை.

ஸ்ரீ இரேணுகாம்பாள் துணை.

# படைவேட்டுப் புராணம்

## (வசனம்.)

---

### காப்பு.

ஏரார் படைவேட்டி ரேணுகையின் காதையினைப்
பாரா ரறியும் படிசெய்யச்—சீராரும்
அஞ்சுமுக னம்மை யளித்தருளு மாறுமுகன்
அஞ்சுமுகன் செய்வா னருள்.

### ஸ்ரீ இரேணுகாம்பாள் வணக்கம்.

அறுசீர் விருத்தம்.

கொடையோங்கு விதர்ப்பபுரி ரைவதவேந் தன்மகளாய்க்
குலவி நின்று
படையோங்கு சேனையுடன் புவிமுழுதுஞ் சஞ்சரித்துப்
பார்த்தா ராய்ந்து
சடையோங்கு முனிசமதக் கினியைமணந் தனைவர்களுஞ்
சாற்றப் பெற்ற
நடையோங்கு படைவேட்டி ரேணுகையி னடிமலரை
நாடி வாழ்வாம்.

### நூல்.

முன்னொரு காலத்தில் நைமிசவனத்தில் சவுனகாதி முனிவர்கள், அனைவரும் ஒன்றாகக்கூடிச் சூதமுனிவரைப் பார்த்து வணக்கத்தோடு இப்பூமியிலிருக்கும் புண்ணிய

தீர்த்தங்கள் தலங்கள் இவைகளுக்குள்ளே நினைத்த மாத்திரத்தில் இன்பம் வீடு ஆயுள் முதலியவைகளைக் கொடுப்பதும், பாவம் முதலியவைகளைப் போக்குவதும் மிக்க மகிமையுள்ளதுமாகிய தலத்தின் பெருமையைக்கேட்க விரும்புகிறோமென்று சொல்ல, அதைக்கேட்ட சூதமுனிவர் பாலாற்றுக்குத் தெற்கிலும் சேயாற்றுக்கு வடக்கிலும் கமண்டல நதிக்கரையிலும் மிக்க சிறப்படைந்து விளங்கும் ஒரு தலம் இருக்கின்றது; அதற்குக் குண்டலி நகரமென்னும் பெயருண்டு. இரேணுகாதேவி வாசம்செய்யுமிடம் பலவற்றுள் இதுவுமொன்று. இதில் இரேணுகாம்பாள் எல்லாவுலகங்களையுங்காத்து. தனது மாயாரூபமான சாமுண்டியென்னுஞ் சத்தியோடுங்கூடி ஒருகாலத்தில் சங்கரித்துக்கொண்டு, சமதக்கினிமுனிவர் ஆசிரமத்தோடும் விளங்குகின்றாள். இந்தத்தலத்தில், முற்காலத்தில் பிருகு முனிவர் வமிசத்தில் பிறந்த ஜமதக்கினி முனிவர் ஆயிரந்தேவ வருடம் தவஞ்செய்து இரேணுகாதேவியை மனைவியாகப்பெற்றுச் சிரஞ்சீவியானார். இந்தத்தலத்தில் இரேணுகாதேவி தன்னுடைய அன்பர்களுக்கு இன்பங்கொடுக்கவும் துன்பங்கெடுக்கவும் தன்னை இரு கூறாகச்செய்துகொண்டு சிலாரூபமாக விளங்குகின்றாள். இந்தஸ்தலத்தில் ஆயிரத்தெட்டுச் சிவாலயங்களும் நூற்றெட்டு விஷ்ணுவாலயங்களும் இருக்கின்றன. முற்காலத்தில் விவஸ்வான் என்னும் அரசன், போரில் பகைவருக்குப் பயந்து இருபத்தைந்து மலைகளால் சூழப்பெற்ற குண்டலிபுரமென்னும் படைவேட்டையடைந்து இரேணுகாதேவியின் சரணமடைந்தான்.

பின்பு இரேணுகாதேவி சிங்க வாகனத்தின்மீதேறி வந்து, தரிசனந்தந்து, அபயமெனவந்த விவஸ்வான் என்னும் அரசனைக் காத்தருளினாள் என்று சூதமுனிவர்சொல்ல உடனே சௌனகாதி முனிவர்கள் பூமியில் இரேணுகாதே

வியின் பிறப்பு முதலிய சரித்திரங்களையும் குண்டலிபுரத்தின் மேன்மையையும், ஜமதக்கினி முனிவர் விவஸ்வான் இவர்கள் சரித்திரத்தையும் கேட்க விரும்புகிறோமென்று சொல்லச் சூதமுனிவர் "கேளுங்கள் முனிவர்களே சூரிய குலத்தில் பிறந்த விவஸ்வான் என்னும் அரசன் அயோத்தியாபுரியை ஆண்டுகொண்டிருந்தான். அவன் விருஷபர்வா என்னும் அசுரனால் போரில் தோல்வியடைந்து நாட்டைவிட்டுக் காட்டையடைந்து வசிக்குங்கால் வசிஷ்டருடைய இருப்பிடத்தை யடைந்து வணங்கினான். அம்முனிவா ஞானக்கண்ணால் பார்த்து, ஓ அரசனே! நீ ஓர் அசுரன் பயத்தினால் வந்திருக்கின்றாய் ஆகையால் நீ வடக்குத் தெற்கில் பத்துயோசனை விஸ்தீரணமும் கிழக்கு மேற்கில் ஒரு யோசனை விஸ்தீரணமும் கீழ்க்கடலுக்கு எழு யோசனை தூரம் மேற்கிலும் விளங்குகின்ற சவ்வாதிமலைப் பக்கத்திலிருக்கும் குண்டலிபுரமென்னும் படைவேட்டிற்குப்போக வேண்டும். அதன் பெருமையை யென்னால் சொல்லமுடியாது. அங்கே இரேணுகாம்பாள் ஆலய மிருக்கிறது. அந்த அம்பிகையின் திருவருளால் உன்பகைவனான அசுரனை வெற்றிகொள்வாய் என்று சொல்ல அதைக்கேட்டு மகிழ்ந்து அத்தலத்தின் அருமை பெருமைகளை அடியேனுக்கருளல் வேண்டுமெனக் கேட்டவுடன் அவ்வாறே சொல்லுகிறேன் கேட்பாயாக என்று சொல்லத்தொடங்கினார்.

ஜமதக்கினி முனிவர் சவ்வாதிமலையின் அருகிலுள்ள குண்டலி நகரத்தில் இடந்தேடிக்கொண்டு ஆயிரந் தேவ வருடங் கழியுமளவும் தவஞ்செய்துகொண்டிருக்குங்கால், விதர்ப்பதேசத்தை யாண்டுகொண்டு வந்தவன் இரைவத மகாராஜன், அவ்வரசனுக்குப் பிரமதேவன் கேட்டுக்கொண்டபடி உமாதேவி ஓர் பெண்குழந்தை வடிவாய்த்

தோன்றி நின்றாள். தோன்றிநின்ற அப் பெண்மணிக்கு இரேணுகை யெனப் பெயர்தந்து வளர்த்துவந்தான். அப்பெண், தனக்குப் பக்குவகாலம் வந்தபின்பு தன் தந்தையைப்பார்த்து, என் தந்தையே! எனக்குக் கலியாணஞ்செய்யத்தக்க காலம்வந்திருப்பதால் நான் சதுரங்க சேனையோடு சென்று எந்த இடத்தில் என் மனத்திற்கிசைந்த கணவன் அகப்படுகின்றானோ அப்போது அவனை மணம் புரிகின்றேன், விடைதந்தருள்வாயெனவினவ, இரைவதன் உன்னிஷ்டப்படி செய்யென விடைகொடுத்தபின்பு, இரேணுகாம்பாள் எல்லா வுலகங்களையும் பார்த்துக் கடைசியில் குண்டலிபுரத்திலுள்ள ஜமதக்கினி முனிவர் ஆசிரமத்தையடைந்தாள். அந்தஇடத்தில் (குண்டலிபுரத்தில் வசிக்கும் ஜமதக்கினி முனிவரை உனக்குக்கணவனாக முன்னமே பிரமதேவன் நியமித்திருக்கிறான் என்று) அசரீரி சொன்னதைக் கேட்டு, முனிவர்கட் கிருப்பிடமாயும் சதுர்வேத கோஷ்டத்தோடு கூடியதாயும், நான்கு வேதங்களும் நாற்றிசையில் காவல்செய்யப்பெற்றதாயும் விளங்கும், ஜமதக்கினி முனிவர் ஆசிரமத்தைக்கண்டு * சந்த துவாரமென்னுமிடத்தில் தனது சேனைகளோடு தங்கியிருந்தாள். இக்காலதகிலும் அம்முனிவர் தவபலத்தினால் † விநாயகமூர்த்தி வடக்கு வாசற்படியிற்றங்கிக் காவல் புரிகின்றார். இவ்வாறே அப்படைவேடானது நான்கு வேதங்களாலும் பல தேவதைகளாலும் உபநிடதங்களாலும் காக்கப்பட்டு விளங்குகின்றது.

இரேணுகாதேவியின் சேனைகளைக்கண்டு காவல்செய்கின்ற வேதங்கள் ஜமதக்கினி முனிவரிடஞ்சென்று இரே

---

* இப்போது இதற்குச் சந்தவாசலென்று வழங்குகின்றது.

† இப்போது இதற்குக் கைலாச பிள்ளையாரென வழங்குகின்றது.

ணுகாதேவியின் வரவையும் அவளழகையும் பக்குவகால முதலியவைகளையும் சொல்லக்கேட்ட முனிவர் தமது சுகோத்திரன் முதலிய சீடர்களை யழைத்து, இப்போது அப்பெண்ணின் கூந்தலைப்பிடித்து, இழுத்துக்கொண்டு வாருங்களென்று ஒரு பிரமதண்டத்தைக் கொடுத்தார். உடனே அச்சீடர்கள் அதையேற்றுச் சந்தவாரமென்னுஞ் சந்தவாசலில் சேனைகள் தங்கியுள்ள இடம்வந்து அவ்விடத்தில் தனது உடல் ஒளியினால் திக்குகளை விளக்கிக்கொண்டும் பலராசப்பெண்களால் சூழப்பட்டும் இருக்கும் இரேணுகாதேவியைக்கண்டு மிக்க வல்லவனான அகிர்தவிருணன் என்னும் சீடன் தண்டத்தையெடுத்து மந்திரங்களையுச்சரித்துப்பிரயோகஞ்செய்தான். அத்தண்டத்திலிருந்து மிகு பலமுடையவர்களாயும் கையில் ஆயுதங்கள் பிடித்தவர்களாயும் தோன்றி அந்தச்சேனைகளோடு போர்புரிந்தார்கள். அப்படிப் போர் நடக்குங்காலத்தில் இரேணுகாதேவி யோசித்துத்தன் பக்கத்திலிருக்குஞ் சாமுண்டி தேவியைப் பார்த்து, நம்மோடெதிர்த்து வந்த சேனையைக் கொல்லக் கடவாயென்று கட்டளையிட் டருளினாள். அக்கட்டளையைப் பெற்ற துர்க்கை யென்னும் சாமுண்டீஸ்வரி வெகு ஆடம்பரத்தோடு ஜமதக்கினியின் சேனைகளின்மீது அம்புகளைச் சொரிந்தும் நெற்றிக்கண்ணினு லெரித்தும் அழிவுசெய்வதைக்கண்ட சீடர்கள் முனிவரிடம் போய்ச்சொல்ல, அதைக்கேட்ட ஜமதக்கினி முனிவர் மூன்றுலோகத்திலுமுள்ள எல்லாத்தீர்த்தங்களையும் வரவழைத்துத், தன் கமண்டலத்தில் ஆவாகனஞ்செய்து, சாமுண்டீஸ்வரியால் உண்டான நெருப்பையணைக்கும்படி அக்கமண்டலநீரைக்கவிழ்த்தார். அந்நீர் மிகுவேகமுடைய ஒருபெரிய $நதியாயோடிச் சாமுண்டீஸ்வரியால் தோன்றிய நெருப்பை யணைத்துக்

$ இப்போது இது கமண்டலநதியென வழங்குகின்றது.

கொண்டு சென்று வெள்ளூர், சம்புவராய நல்லூர், காமக்கூர், முள்ளிப்பட்டு, ஆரணி இவைகளின் வடபக்கமாகச் சென்று வாழைப்பந்தலுக் கருகில் சேய் நதியோடுகூடிச் சமுத்திரஞ் சோாநின்றது.

அதன்பின் முனிவர் அகிர்தவிருணன் என்னும் சீடனைப்பார்த்துப் பகைவரையழிக்கும் வன்மையுடைய குவளைமலர் மாலையைக்கொடுத்து அந்தச் சாமுண்டீஸ்வரியைக் கட்டிக்கொண்டுவந்து இந்த வனத்தில் நிறுத்திவிடுவாயெனச்சொல்லித் தம் ஆச்சிரமஞ் சென்றார். உடனே அச்சீடன் அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு செங்குவளை மலர்மாலையால் சாமுண்டீஸ்வரியைக் கட்டிக்கொண்டு போய்க் கமண்டலநதிக்கரையில் ஸ்தாபித்துவிட்டான். அது முதல் இந்தத்தலத்தில் சாமுண்டிதேவி தரிசனமளித் தோங்குகின்றனள் *அதன்பின்பு இரேணுகாம்பாள், தன் சகியைப்பார்த்து, ஏ, சகியே! இஃதென்ன ஆச்சரியம்? முனிவர் ஆச்சிரமமான இவ்வனத்தில் தவசிகள் சுயேச்சையாகப் போர்செய்கிறார்கள். ஆகையால் ஜமதக்கினி முனிவரைப் பார்க்க விரும்புகிறேன், அவரே எனக்குத் தகுந்த கணவர். நீ சண்டையை நிறுத்திவிட்டு என்னோடுகூட வருவாய். நாமிருவருஞ்சென்று கோரிக்கையை நிறைவேற்றவேண்டும். என்றாள். அதைக்கேட்ட உத்தமியென்ற சகியானவள் சேனைகளை அவ்விடத்தில் நிறுத்திவிட்டு இரேணுகாதேவியோடு ஆனிமாதம் மக நக்ஷத்திரத்தில் அந்த வனத்தில் புகுந்தாள். (அதுமுதல் அந்தத்தலம் சேனுறதம் *(படைவேடு) என்று வழங்கலாயிற்று.) பின்பு இரேணுகாதேவியானவள் சேனைகளை வதைத்து, முனிவருடைய

* அந்நாளில் சாமுண்டீஸ்வரியைப் புஷ்பமாலையால் கட்டிய இடமே இப்போது புஷ்பகிரியென வழங்குகின்றது.

* படைவீடு என்பது படைவேடு என வழங்குகின்றது.

சீடர்களை அவமதித்து, அந்த ஆச்சிரமத்தை நோக்கிப்போகும்போது, அகிர்தவிருணன் தருப்பைகளைக் கொண்டுவந்து, குண்டலாகாரமாய்ச்செய்து, மந்திரித்து விட்டெறிந்தான். அந்தத்தருப்பையானது எவர்களும் அஞ்சத்தக்க பர்வதாகாரமாய் விட்டது. (அதுமுதல் இந்தத்தலம் குண்டலிநகரமென வழங்குகின்றது.) அப்போது மாயாரூபியான இரேணுகையானவள் உத்தமியென்னும் சகியோடு பட்டணத்தை நான்கு பக்கத்திலும் பார்த்து, முனிவர் ஆக்கினையைமீறிப் பர்வதாகாரமான குண்டலத்தைத்தாண்டி, அவ்வாச்சிரமத்தைக கண்டாள். அவளைப் பார்த்தபோதே முனிவர் முதலியோர் பலங்குன்றி மூர்ச்சையானார்கள். உடனே ஜமதக்கினி முனிவர் கையில் தருப்பையை யெடுத்துக்கொண்டு மிருகோபத்தோடு இரேணுகாதேவியைத் துரத்திக்கொண்டோடினார். அதைக்கண்ட இரேணுகாதேவி முனிவர் வேகமாய் வருவதைக்கண்டு பயமடைந்து அந்நகரத்தின் ஈசானியதிக்கை யடைந்தாள். முனிவர் தன்பின் தொடர்ந்துவருவதை அந்த இரேணுகாதேவி கண்டு ஒரு புற்றின் துவாரத்தில் புகுந்தாள். அதைக் கண்ட முனிவர் இரேணுகையுடன்வந்த உத்தமியென்னுஞ் சகியை அவ்விடத்தில் பிரதிஷ்டைசெய்துவிட்டு, பின்பு இரேணுகாம்தவி புகுந்த புற்றின்கண் அடைந்தார். அப்புற்றுக்குள் இரேணுகாம்பாள் கழுத்துக்குக் கீழ்பட்ட அங்கமெல்லாம் கல்வடிவமாகும்படி செய்துகொண்டு, முனிவர்முன் விளங்கினாள். அதைக்கண்ட முனிவர் நீ யார்? எவ்வுலகத்தாள்? யாருடைய மகள்? எதைக்கருதி நீ இங்கு வந்தாய்? உண்மையைச் சொல் எனக் கேட்க, அதைக் கேட்ட இரேணுகை ஐயா நான் இரைவத வேந்தனுடைய குமாரி என்பெயர் இரேணுகை. நான் கணவனை விரும்பி இவ்வுலகமெல்லாஞ் சுற்றித்திரிந்து கடைசியில் உம்மையே

கணவராக அடையவேண்டுமென்று இங்குவந்தேன். ஆகையால், நீர் என்னை மணம்புரியவேண்டும் என்று சொல்ல, அதைக்கேட்ட முனிவர் மிக்க கோபங்கொண்டு என்ன காரணமாக இவ்வனத்தில் வந்து ரிஷிபுத்திரர் முதலிய எல்லோரையும் பயப்படுத்தியும், மாயையினால் என்னை மோக சாகரத்தில் மூழ்கும்படி செய்தும், சிரசுதவிர மற்றைய அங்கங்களைக்கல்வடிவமாகக்காட்டியும், மறுபடியும் மானிடப் பெண்ணாக நின்றாய்? இந்தக் குற்றங்களினால் நீ சண்டாளத் துவமடையக்கடவது என்றும், நீ மாயாதேவியென்னும் பெயரோடு இவ்வுலகிலுள்ள நகரங்களுக்கு முதல்தேவதையாக நிலைபெற்றோங்கக்கடவது என்றும் சொல்லித் தம் இருப்பிடஞ் சேர்ந்தார். அதன்பின் இரேணுகாதேவி பயபக்தியுடன் அம்முனிவர்பின் சென்று, அங்கிருக்கும் முனிவர் கூட்டத்தைஅடைந்து, எல்லோரும் தன்னிடம பயந்திருப்பதைக்கண்டு அவர்களுக்குமுன் உடுக்கை யென்னும் வாத்தியத்தை வாசித்தாள். அவ்வோசையைக்கேட்டவுடன் அங்கிருந்த முனிவர்களெல்லாம் முன்போலவே பலமடைந்து மிகு களிப்புடன் தூங்கியெழுந்தவர்களைப் போல் எழுந்தார்கள். இந்த அதிசயத்தை ஜமதக்கினி முனிவர் கண்டு களிகூர்ந்து, ஏ, இரேணுகா! உன் வல்லமையைக் கண்டு களித்தேன். உனக்கு வேண்டிய வரத்தைக்கேள் தருகிறேன் என்றார். அவ்வார்த்தையைக்கேட்ட இரேணுகாம்பாள் வணக்கமாய்ச் சிரசின்மேல் கரங்களைக்குவித்து முனிவரே! அடியாள்மீது கருணைசெய்து வேதவிதிப்படி யென்னை மணஞ்செய்துகொண்டு, நீர் கொடுத்த சாபத்தை மாற்றவேண்டுமென்று வணங்கினாள்.

அதைக்கேட்ட முனிவர் ஓ இரைவதகுமாரி! என் சொல் தவறிப்போகாது. ஆகையால் நீண்டநாள்சென்ற

148879

பின்பு ஒருகாரணத்தினால் ஆன்மாக்களுக்கு இகத்தைச் செய்யும்பொருட்டு இப்போதே நீ இரண்டு வடிவமானாய். ஒரு வடிவம் என்னோடுகூடச் சுவர்க்கலோகத்தில் போக மோக்ஷங்களை அனுபவிக்கும். மற்றொரு வடிவம் இப்பூமியில் மாயையென்னும் பேர்கொண்டு எங்கும் வியாபித்து விளங்கும். இதில் சிறிதும் சந்தேகமில்லை என்றுசொல்லி, ஆலோசித்து, இவளை விவாகஞ்செய்துகொள்ளுங்காலம் நேர்ந்தது: உலகத்தில் தேவமானுடர்களுக்குத் தெய்வம் ஒன்று பலமாகவிருக்கின்றது என்று நிச்சயித்து. அங்குள்ள அனைவருக்கும் தமது திருமணச்சேதியைத் தெரிவித்தார். அச்சமயத்தில் முனிவருடைய தவமகிமையால் திரிமூர்த்திகள் முதலிய அனைவரும் வந்தார்கள். இரைவதனும் தன்குமாரியின் திருமணச்சேதி தெரிந்து தன்புதல்வனோடு வந்தான். பங்குனிமாத உத்திர நக்ஷத்திரத்தில் பிரமதேவன் செய்விக்க இரேணுகாதேவியின் திருமணம் மங்களகரமாய் நடந்தது. விவாகம் முடிந்தவுடன் ஜமதக்கினி முனிவர் காமதேனுவைக்கொண்டு அனைவருக்கும் மேன்மையான திருவமுதுசெய்வித்து அவரவர்களுக்குத் தக்கபடி மரியாதைசெய்து வணங்கினபின், தேவர்களெல்லாரும் ஆசீர்வதித்துச் சென்றார்கள். அதன்பின் முனிவர் பத்தினியான இரேணுகையுடன் மகிழ்ந்திருந்துகொண்டு பலயாகங்களைச் செய்து முடித்தார். இரைவதன் தன்புதல்விக்கு வேண்டிய சீதனங்களைக் கொடுத்துத் தன் குமாரன் சந்திரகேதுவை யழைத்து, முனிவரையும் இரேணுகாதேவியையும் காத்துக்கொண்டிருக்கச்செய்து, தன் இருப்பிடஞ் சேர்ந்தான். சந்திரகேது தென்திசையிலுள்ள அரசர்களை வென்று ஒரு பட்டணம் உண்டாக்கி ஆண்டுகொண்டிருந்தான். கிருதயுகம் பத்தாயிரம் வருடத்திற்குமேல் அச்சந்திரகேதுவால் குண்டலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அம்மன்னன்

காஞ்சிமுதல் காவேரி வரையில் ஆண்டுவருங்கால் மருத்துவான் என்னும் ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு அரசைக் கொடுத்துச் சந்திரகேது தவத்திற்குச் சென்ருன். அம் மருத்துவான் என்னும் அரசன் காஞ்சிபுரமுதல் இராமேசுரம்வரை அரசாளுங்காலத்தில் இரேணுகா தேவி, முனிவரைக்கூடி விஷ்ணுவின் அமிசமான பரசுராமன் என்னும் பிள்ளையைப் பெற்ருள். பிறந்த குழந்தையை இரேணுகாதேவி யெடுத்துக்கொண்டுபோய்த் தன் கணவரிடங் கொடுக்க, அம் முனிவர் அப்பிள்ளையைப் பெற்றுச் செய்தற்குரிய சடங்குகளைச் செய்தார். வயது வந்தபின் அப்பரசுராமர் தாய்தந்தையரிடம் விடைபெற்றுக்கொண்டு மகேந்திரமலையையடைந்து கடுமையான தவஞ்செய்தார் என்று வசிட்ட முனிவர் சொல்ல விவஸ்வான்என்னும் அரசன் அவ்வுத்தமியின் சரிதம் முழுதுங் கேட்க விரும்புகிறேன் என்றுகூற அவ்வாறே சொல்லத் தொடங்கினுர்.

பரசுராமர் தவத்திற்குச் சென்றபின் முனிவர் பத்தினிசகிதமாய் இல்லறத்தைச் சரியாய் நடாத்திவருங்கால் இரேணுகாம்பாள் மூன்றுலகத்திலும் புகழ்பெற்ற தாமரைக்குளத்தில் நீராடுவதற்காகக் கணவன் உத்தரவைப் பெற்றுக்கொண்டு சென்று, அந்நீரில் மூழ்கும்போது அந்தரவாசியான கந்தருவன் சாயையை அந்நீரிலே கண்டு அவனழகையும் இளமையையும் எண்ணி ஆச்சரியப்பட்ட வுத்தமி அந்நீரில் குளித்துக் குடம்நிறைய நீரை யெடுத்துக் கொண்டு தன் இருப்பிடம் வரும்போது நடுவழியில் தலையில்வைத்துக்கொண்டிருந்த மட்குட முடைந்து அத்தண்ணீரால் உடம்பு முழுதும் நனைந்ததை முனிவர் ஞானக்கண்ணுல் பார்த்து மிக்க கோபங்கொண்டு அடி இரேணுகா நீயிங்கே வரக்கூடாதென்று தடுத்துவிட்டு க்ஷத்திரிய விரதத்

நிலிருக்கின்ற தன்புத்திரனான பரசுராமனைச் சிந்தித்து நிஷ்டையிலிருந்தார். அப்போது பரசுராமன் மனோவேகமாய் வந்து தன் பிதாவின் முன்னே வணங்கி நிற்கக்கண்ட முனிவர் சிவந்த கண்களையுடையவராய் உன் அன்னையைக் கொன்றுவிடுவாயென்றார். அக் குறிப்புணர்ந்த பரசுராமன் தன் தாயின் தலையைக் கத்தியால்வெட்டித் தள்ளிவிட்டுத் தன் தந்தையிடம்வந்து தாங்கள் சொன்னபடியே செய்தேன். கோபத்தையடக்கித் தயைசெய்யவேண்டும். தாயைக்கொன்ற என் கையையும் வெட்டிவிட்டேன். மன்னிக்கவேண்டும் என்று சொன்ன திருமகனை முனிவர் மடியில் வைத்துக் கொண்டு தழுவி முத்தமிட்டு அப்பா! குழந்தாய்! உனக்கிஷ்டமான வரத்தைக்கேள் தருகிறேன். உன்போல் பிள்ளை இவ்வுலகத்தில் இதுவரை பிறந்ததுமில்லை இனி பிறக்கப் போவதுமில்லையென்று சொன்ன தந்தையின் மொழியைக் கேட்டு என் தந்தையே! நான் தாயாருடைய வருத்தத்தால் பீடிக்கப்பட்டேன் ஆகையால் தயைசெய்து எழுப்பித்தரவேண்டும் என்ற புதல்வன் சொல்லைக் கேட்டு முனிவர் களிகூர்ந்து கலசநீரை மந்திரித்துத் தன் மகனான பரசுராமனிடங்கொடுக்க அவன் அதைப் பெற்றுக்கொண்டு தன் தாயார் வெட்டுப்பட்ட இடம் போய்க் காலகதியால் அங்கே வெட்டுப்பட்டுக் கிடக்கின்ற சண்டாளச்சி படலைப் பார்த்து அவ்வுடலில் இரேணுகையின் தலையை ஒட்டும்படி வைத்து, நீரைமந்திரத்தால் தெளித்தவுடன், இரேணுகாம்பாள் அந்தச் சண்டாளப் பெண்ணின் உடம்போடு பிழைத்துத் தன் புதல்வனைப்பார்த்துத் தனக்கு நேர்ந்த வேறுபாட்டைச் சொன்னாள். அதைக்கேட்ட பரசுராமன் தெய்வச் செயலால் இரண்டு பிரிவான தன் தாயை அழைத்துக்கொண்டுபோய் ஜமதக்கினி முனிவர்முன் விட்டான். அம்முனிவர் கண்டு அப்பா இந்த வடிவம் தெய்வச்

செயலால் வந்தது; இனி அவள் எனக்குப் பணிவிடை செய்துகொண்டு என்னிடமிருக்கட்டும், நீ முன்போல்தவத் திற்குப்போவாய் எல்லாருக்கும் காலபலம் ஒன்றிருக்கிறது: அதைத்தடுக்க எவராலும் முடியாது—என்றதந்தையினிடம் விடைபெற்றுக்கொண்டு மகேந்திரமலையை யடைந்தான். இரேணுகை தன் கணவனிடமிருந்தாள். மருத்துவான் என்பவன் பகைவர்களால் தோல்வியடைந்து குண்டலிநகரம் விட்டு விதர்ப்ப நாட்டை யடைந்தான். படைவேடானது மறுபடியும் காடாய்விட்டது. அவ்விடமிருந்த முனிவர்கள் இரண்டுவிதமான இரேணுகையைப் பார்த்து சண்டாளப்பெண் சம்பந்தமான இவளைப்பார்க்கக்கூடாதென்று அவ்விடம்விட்டு வெளியேறினர்கள். அச்சமயம் இரண்டாயிரங்கைகளையுடைய கேகயதேசத்திற்கதிபதியானகார்த்தவீரியார்ச்சுனன் குண்டலிவனத்தை யடைந்து ஜமதக்கினி முனிவரைக்கண்டு வணங்கினன். அம்முனிவரும் தக்க மரியாதைசெய்து காமதேனுவைக் கொண்டு சேனைகளுடன் உண்ணச்செய்து ஆசீர்வதித்தார். பின்பு கார்த்தவீரியார்ச்சுனன், ஐயா முனிவரே! எல்லாச் செல்வங்களையுங் கொடுக்கும் காமதேனுவை எனக்குக் கொடுத்துவிடவேண்டும் நானதற்காக நூறு பசுக்களையும் எனது இராச்சியத்தையும் கொடுக்கிறேன் என்று கூறிய அரசனைப் பார்த்து முனிவர் காமதேனுவைக் கொடுக்கமாட்டேனென்று சொல்ல, உடனே கேகயன் கத்தியையெடுத்து, ஜமதக்கினி முனிவர் தலையை வெட்டிவிட்டுக் காமதேனுவை ஓட்டிக் கொண்டு சேனைகளோடு தன் நகரஞ்சேர்ந்தான். உடனே இரேணுகாம்பாள் வெட்டுப்பட்டுப்போன கணவனை விதிப்படி தகனஞ்செய்யுங்கால் தானும் உடன்கட்டையேறினள். அச்சமயம் தெய்வ வசத்தால் மேகங்கள் மழையைப்பொழிந்தன. அம்மழை நீரால் சுடலை நெருப்பு

அணைந்த இரேணுகையும் நெருப்பினல் வெந்து ஆடையில்லாமல் காஷ்டத்திலிருந்தெழுந்து அதிக துக்கத்தோடு வேப்பந்தழையைக் கொண்டுவந்து ஆடையாய்க் கட்டிக் கொண்டு, தேகத்திலுண்டான இரணத்தினல் பீடிக்கப் பட்டு வருந்தி, ஆசிரமத்தை விட்டு வெளிப்பட்டாள். உலகத்திலுள்ள ஜனங்கள் வேறுபட்டவடிவமும் வேப்பிலையாடையுமுடைய அந்த இரேணுகையைப்பார்த்து பயந்து இவள் யார்? என்ன காரணமாயிப்படியாளுள்? என்று பலவாருக நிந்தித்தார்கள். பின்பு இரேணுகையானவள் சண்டாளரூபத்தைக்குறித்தும் பசியினலும் வருந்திச் சென்றனள். அவளைச் சண்டாளப் பெண்களெல்லாரும் கண்டு பதிவிரதாசிரோமணியென்று ஒருவீட்டுக்கழைத்துக் கொண்டுபோய் இவள் பிராமணப் பெண்ணென் றறிந்து புதிதான பச்சரிசி மாவையும் வெல்லத்தையுங் கொடுத்தார்கள். (அதனுல்தான் இவ்வுலகத்தில் மாரியம்மனுக்குப் பச்சரிசி மாவும் பானகமும் நிவேதனம் பண்ணும் வழக்கம்) அதைவாங்கிப்புசித்துக் களைதீர்ந்து, அவ்விடத்தில் மூன்று நாளிருந்து, பின்பு இரேணுகாதேவி வண்ணுன் வீட்டிற்குப் போனுள். ஏ! விவஸ்வான் மகாராஜனே, அந்தத் தேவியானவள் துயரத்தோடு வண்ணுன் வீட்டில் சில நாளிருந்து, பழைய ஆடையைத் தரித்துக்கொண்டு. குண்டலி வனத்திற்குச் சென்று, தன் புத்திரனுன பாசுராமனைச்சிந்தித்தாள். உடனே பரசுராமர் வில்லையும் பாணத்தையும் ஏந்திக்கொண்டு மூன்றுலகங்களையு மெரிக்கிறவர்போல் இரேணுகையின்பாலடைந்தார். அந்தத்தேவியானவள் புதல்வனைப்பார்த்து அதிக சோகத்தோடு கூறினுள். பின்பு விஷ்ணு அவதாரமான பாசுராமர் சகல சங்கதியும் ஞானக்கண்ணுலறிந்து, கண்ணிரண்டுஞ்சிவந்து, அதிக கோபத்தோடு அந்த கார்த்தவீரியார்ச்சுனனை

புத்திர மித்திர சேனைபரிவாரத்துடன் கொன்று, இப்பூமியில் க்ஷத்திரிய வம்சமில்லாமல் ஒழித்துவிட்டு, மறுபடியும் இந்தக்கோபம் தணிப்பேன் தெய்வமும் துர்ப்பலமாயிருக்கிறவனையே கெடுக்கின்றது, என் தாயார் மகாபதிவிரதையென்றுலகத்தில் நல்லகீர்த்தி பெற்றவளாயிற்றே அவள் தன் கணவனோடுகூட உடன்கட்டையேற அக்கினிப்பிரவேசஞ்செய்யும்போது இந்திரன் முதலிய தேவர்கள் காரணமின்றி மழைபொழியச்செய்ததனால் அவர்களையுமிப்போது அதஞ்செய்கிறேன் என்று பிருகு வம்ச திலகரான பரசுராமர் வில்லில் பாணங்களைப் பூட்டினார் உடனே கைலாசகிரியிலிருந்து சிவபெருமான் பிரமன் விஷ்ணு முதலிய தேவர்களோடுவந்து பரசுராமரைப் பார்த்து இந்த கோபத்தை விட்டுவிடும் தெய்வத்தாலானகாரியம் யாராலும் தடுக்கப்படாது, உம்முடைய தாயான இரேணுகை உலகத்தில் நல்ல கீர்த்தியடையப்போகிறாள். இப்போது அக்கினியில் வெந்ததனாலாகிய * கொப்புளங்கள் முத்தாரமென்னும் முத்துக்களாக விளங்கப்போகின்றன. அவள் சகல பிராணிகளுடைய தேகங்களிலும்வியாபித்து வைசூரி அல்லது அம்மை யென்னும் பேரோடும் மாயாதேவியுமாய் விளங்கப்போகின்றாள். ஏ, பரசுராமா! அந்த வேப்பிலையானது உன் மாதாபூசைக்குத் தகுந்ததாயிருக்கப்போகின்றது. சண்டாளப் பெண்களால் கொடுக்கப்பட்ட பச்சரிசிமாவும் வெல்லமும் பானகமும் நிவேதனமாக ஏற்பட்டிருக்கின்றன. நகரங்களில் இரேணுகையானவள் சிரசைமாத்திரம் பிரதானமாகக்கொண்டு பூசைக்குருகமாய் விளங்கப்போகின்றாள். தேவதைகளாலும், ஜனங்களாலும் தடுக்கப்படாதவளாய்த்திரிலோகத்தையும்வியாபித்தவளாய் அடியார்களுக்கு

---

* அக்கொப்புளங்களே எல்லோர்க்கும் அம்மைவார்த்தல் என்பது.

இஷ்டார்த்தத்தைக் கொடுக்கின்றவளாய் அநேகபூதவேதாளங்களோடு சூழப்பட்டவளாய் வண்டியிலேறிக்கொண்டு சஞ்சரிக்கப்போகின்றாள். அதுவுமன்றிச் சண்டாள தேகத்தை விடுத்துத் துக்க மோகங்களைநீக்கித் திவ்விய சரீரத்தோடு விளங்கப்போகின்றாள் என்று சொன்ன பரமசிவன் திருவருட்பார்வையால் ஜமதக்கினிமுனிவரும் உயிர்பெற்று எழுந்து, இரேணுகையும் சண்டாளத்துவத்தையொழித்துப்பழைய தேகமடைந்து, ஜமதக்கினி, இரேணுகை, பரசுராமன் முதலிய மூவரும் கடவுளைச் சாஷ்டாங்கமாக வணங்கிக்களிப்படைந்து சர்வ சக்தியுடைய தேவ தேவோத்தமனான ஜெகதீசா! நான் முன் இரண்டு பிரிவடைந்தேனல்லவா? அவற்றுள் சிரசுமாத்திரம் பிரதானமாய்த் தங்களுத்திரவின்படி உலகத்தில் மேன்மையடையவும் மற்றொருபிரிவு ஜமதக்கினி முனிவரோடு சுவர்க்கத்துக்குப் போகும் படியாயும் வரந்தரவேண்டும் என்ற இரேணுகையைப்பார்த்து, எம்பெருமான் அவ்விதமே வரந்தந்தேன் நீ உலகத்தில் பக்ஷிகள், மிருகங்கள், மாந்தர்கள் முதலானவைகளில் எக்காலமும் மூன்றிலொருபங்கு அதஞ்செய்து கொண்டு சஞ்சாரஞ் செய்யவேண்டியது. உன் சம்பந்தத்திலுண்டான இந்தச் சண்டாளக் கன்னிகை யெமலோகத்தில் வசித்துக்கொண்டு மகா சத்தியுள்ளவளாய்த் துர்மாண சொரூபியாய் உலகங்களைச் சங்காரஞ் செய்கிறவளாய் ஆலயம் குணமில்லாதவளாய் வாந்திபேதி விஷக்காய்ச்சல் முதலிய ரூபங்களாய்த் தேவாசுரரால் தடுக்கக்கூடாதவளாய் துர்மாரியென்னும் பேருடையவளாய் உனக்குச் சகியாக வும் விளங்கக்கடவது. இவளுக்கு மந்திரமில்லை, மருந்துமில்லை. இவளுக்குச் செல்வனும் வறுமையாளனுமொன்றேயாகும் எப்பொழுதும் உன்னுடைய ஆலய சமீபத்தில்வசித்துக்கொண்டிருந்து இப்பூமியில் கலியுகத்தில் வேதம் நஷ்ட

மாயும், தர்மம் சூன்யமாயும், பொய் மிகுந்தும் போகும் போது இவள் சஞ்சாரஞ் செய்வாள். ஏ, இரேணுகா! நீ பூர்வத்தில் இவ்விடத்தில் எப்படிச் சிலாரூபமாக உற்பவித்தாயோ அதுவே பிரதானமாக இருக்கட்டும். பூலோகத்தில் உன்னைச் சிந்திக்கின்றவர்களைக் காத்தும் நிந்திக்கின்றவர்களைத் தண்டித்தும் விளங்கக்கடவாய்; உன்னால் கற்பிக்கப்பட்ட இந்தச்சுடலை நீறானது ஒவ்வொரு வருஷத்திலும் விருத்தியடையக் கடவது. உலகத்தில் உன்னால் உண்டான அம்மை முதலியவைகளால் பீடிக்கப்பட்டவர்கள் கமண்டல நதியில் குளித்து வேப்பிலையை ஆடையாகக் கட்டிக்கொண்டு, ஆலயத்தை வலம் வந்து, பச்சரிசிமா, பானகம் முதலியவைகளை நிவேதனம் செய்து திருநீற்றை உடம்பில் தரித்து வணங்கினால் அவர்களுக்கு இஷ்டார்த்தங்களைக் கொடுத்துத் துர்மாண முதலிய துன்பங்களை நீக்கி மங்களகரத்தைக் கொடுக்கக் கடவாய். இவ்விதமான வரங்களை இரேணுகாம்பாளுக்குக் கொடுத்து மகிழச்செய்து இரேணுகாம்பாளைத் திரிமூர்த்திகளும், மற்ற தேவர்களும் பூஜித்து ஒருவருக்கும் தெரியாமல் தங்கள் தங்களிருப்பிடம் சேர்ந்தார்கள். இப்போதும் சந்திரசேகரனை பரமசிவன் அந்த க்ஷேத்திரத்தில் வசிக்கிறார். விஷ்ணுவும் பர்வதத்திற்குச் சமீபத்தில் வசிக்கிறார். இது நிற்க, ஜமதக்கினி முனிவரும் பரசுராமருடன் கலந்து சில வசனங்களைப் பேசிவிட்டு இரேணுகா சகிதராய்ச் சுவர்க்கலோகம் போய்ச்சேர்ந்தார்கள். அதுமுதல் இந்தத்தலத்தில் இரேணுகாதேவி மனோபீஷ்டங்களைக் கொடுத்துக்கொண்டு விளங்குகின்றாள். இப்பதிவிரதாசிரோமணியின் ஆலயத்தின் சமீபத்தில் * இராமதீர்த்தம் ஒன்றிருக்கிறது. அங்

* இராமதீர்த்தம் என்பது இப்போது கிணற்றுவடிவமாக விளங்குகின்றது.

நீரினால் பரசுராமர் இரேணுகாதேவிக் கபிடேகஞ் செய்தார். அந்த அனுக்கிரகத்தினால் பரசுராமர் திவ்யபாணங்களினால் கார்த்தவீரியார்ச்சுனனைப் பரிவாரத்துடன் சங்கரித்துப் பூமியில் க்ஷத்திரியரில்லாமற் செய்து காசிபமுனிவருக்குப் பூதானங் கொடுத்தார். (அதுமுதல் இந்தப் பூமிக்குக் காசினியென்றோர் பேருண்டு). இதைக் கேட்ட விவஸ்வான் மகாராஜன் ஓ வசிஷ்டமகா முனிவரே! தர்மாரியென்னும் பெயருடைய கன்னிகை யாருடைய பெண்? எதற்காகச் சண்டாளத்துவத்தையடைந்தாள்? அருளிச்செய்யவேண்டுமென, உடனே முனிவர் சொல்லத்தொடங்கினார். ஓ ராஜனே! இந்தத் தர்மாரியென்பவள் யமதருமராஜனுடைய புதல்வி. எப்பொழுதும் நரமாமிசம் புசிப்பவள்; துராசாரமுடையவள்: துஷ்டநடவடிக்கையுள்ளவள்: ஒருகாலத்தில் அகஸ்திய முனிவரை யடைந்தாள். அங்கு வீரமுடையவளான தர்மாரி சில ரிஷி புத்திரர்களைக் கொலை செய்ததைக்கண்ட அகத்தியர் நீ தேவதைகளால் நிந்திக்கப்பட்ட சண்டாளத்துவத்தை யடையக்கடவதென்று சபித்தவுடன் தர்மாரி சண்டாளத்துவத்தையடைந்து குண்டலி நகரத்தையடைந்தாள். அதையறிந்த ஜமதக்கினி முனிவர் மந்திரங்களினால் பட்டணத்திற்கு வெளியே யிழுத்துக்கொண்டுவந்து, தன்னாச்சிரமத்திற்கு முன்பாகப் புதைத்தார். பரசுராமர் அதையறிந்து தம் தாயார் சிரசோடு சேர்த்துவிட்டார். அவள் அந்த இரேணுகையின் சம்பந்தத்தாலும் திரிமூர்த்திகளின் தரிசனத்தாலும் மறுபடியும் தேகத்தையடைந்து இரேணுகாம்பாளோடுகூட வசித்துக்கொண்டிருக்கின்றாள். இவளுக்கு மந்திரம் மருந்து முதலானவைகள் ஒன்றுமில்லை. இவள் பட்டணங்களிலும் கிராமங்களிலும் பிரவேசித்தால் இரேணுகாதேவியின் பூஜையாலும் ஜமதக்கினி முனிவர் மகாவிஷ்ணு இவர்கள்

சங்கீர்த்தனத்தாலும் சாந்தியாய் விடுவாள். உலகத்தில் அம்மை போடப்பட்டவர்களும், தூர்மாரியினுடைய பயத்தையடைந்தவர்களும், குண்டலிபுர தேவதையான ஸ்ரீ இரேணுகாம்பாளைப்பிரார்த்திக்கச் சாந்தியடைவார்கள். ஏ, விவஸ்வான் மகாராஜனே! அப்புண்ணியதலத்தில் இரேணுகாதேவியின் மகிமையினாலும், ஜமதக்கினி முனிவர் மகிமையினாலும் இப்போதும் யாதொரு பயமுமில்லை. நீ குண்டலிநகரத்தையடைந்து, கமண்டல நதியில் மூழ்கி, ஸ்ரீ இரேணுகாம்பாளையும் சாமுண்டீஸ்வரியையும் பூஜித்தால் திவ்யாஸ்திரமுடையவனாய்ப்போரில்வல்ல அவ்வசுரனைச்சங்கரித்து நல்ல கீர்த்தியையடைவாய் என்றதைக்கேட்டு விவஸ்வான் மகாராஜன் குண்டலிநகரத்தையடைந்து, கமண்டல நதியில் குளித்து, வேப்பிலையையுடுத்திக்கொண்டு ஒரு மாசம் வரையில் ஸ்ரீ இரேணுகாம்பாளைப் பூஜித்து அம்பிகையால் கொடுக்கப்பெற்ற யானைமீதிலாரோகணித்துக்கொண்டு, சேனைகளைக் கூட்டிக்கொண்டுபோய் அவ்வசுரர்களைச் சங்கரித்துக்குண்டலிபுரத்தில் பட்டணம் நிர்மாணஞ்செய்தான். அப்போது கிருதயுகத்தில் நான்குலக்ஷ வருடங்கள் சென்றன. பின்பு அவ்வரசன் இரேணுகாதேவிக்கும் சாமுண்டிதேவிக்கும் ஆலயம்கட்டி, பின்பு கஜாரூடனாய்ச் சமுத்திரம் வரையிலுள்ள அரசர்களைவென்று மூத்தகுமாரனை அயோத்தியாபுரியில் செங்கோல்செலுத்தும்படிசெய்து, தான் குண்டலிநகரத்தில் அரசுசெய்துகொண்டிருந்தான். இந்தத்தலத்தில் ஆயிரம் சிவாலயங்களும் நூறு விஷ்ணுவாலயங்களும் உண்டாயின. பின்பு விவஸ்வான் மகாராஜன் ஆயிரம்வருடங்கள்வரையில் போகங்களையனுபவித்து ஹரிஹரனென்னும் புத்திரனிடத்தில் இராஜ்யத்தைக் கொடுத்துத் தான் தவம் புரியச்சென்றனன். ஹரிஹரனென்பவன் மகத்தான சேனைகளோடுசென்று அநேக அரசர்களை வென்று குண்டலி

புரத்தைப் பரிபாலனஞ்செய்துவருங்கால், நானுவிதமான மெத்தை மேடைகளும், கோபுரங்களும், மேருமலைக்குச் சமமான உப்பரிகைகளும் நிறைந்து இரண்டாவது சுவர்க்கம்போன்ற அப்பட்டணத்தை நிருமித்து, வைசியர் முதலிய எல்லா வருணத்தாரையும் வரவழைத்து, நிலைபெறச் செய்ததோடு நர்மதாநதி தீரத்திலுள்ள அளவற்ற பிராமணரை வரவழைத்துக் கமண்டலநதி தீரத்தில் அநேக அந்தணர் வீதிகளைப் பிரதிஷ்டைசெய்தான். பின்பு அவ்வந்தணருக்குப் பூதானம் கோதானம் கிரகதானம வஸ்திர தானம் சொர்னதானம் முதலியவைகளை வேண்டியமட்டும் கொடுத்து நாடோறும் இரேணுகாதேவி சாமுண்டிதேவி இவர்களைப் பூஜித்துத் தர்மசொரூபியாய் அந்த ஹரி ஹரனென்பவன் ஆயிரம் சிவாலயங்களையும் நூறு விஷ்ணுவாலயங்களையும் இரக்ஷித்துக்கொண்டிருந்தான். அதற்குப்பின்பு நூறு வருஷத்தில் மேலண்டை பர்வதத்தில் சிற்பிகளினுல் ஒரு கோட்டையைக்கட்டி நூறு ராஜசூயயாகங்களும் நூறு அசுவமேதங்களும், இன்னும் பல யாகங்களுஞ் செய்து, அநேகமான போகத்தை யனுபவித்து, ஐயாயிரம் வருடங்கள் இராஜ்யமாண்டு, பின் தவஞ்செய்ய வனமடைந்தான். அதன்பின்பு ஹரிஹர மகாராஜன்புதல்வன் இரணியவருணனென்பவன் ஒன்பதினுயிரவருடம் வரையில் பூமியையாண்டான். அவன்புதல்வன் ஹேமமாலியென்பவன் ஆண்டான். இந்தப்படி அந்தக்குண்டலிககரத்தைப்பரம்பரையாய் மனுநீதிவழுவாது பூபரிபாலனம் செய்துவந்தார்கள். பின்பு காலபேதத்தினுல் திரேதாயுகம் பிறந்தது, ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர் இராமாவதாரஞ்செய்து, சேதுவில் அணைகட்டி, இராவணனைச் சங்கரித்து, சீதாசமேதராய், அயோத்தியையாளும்போது எ, இராமா! பாற்கடலில் ஹேமசிருங்கமென்றொரு பட்டணமிருக்கிறது. அதில் சதமுகராவண

னென்பவன் ஒருவனிருக்கிறான். அவனையும் அவனைச்சேர்ந்த இராக்ஷதர்களையும் சங்கரிப்பதுதான் மேன்மை. சந்திர சூரியருள்ளவரையில் நல்ல கீர்த்தியடைவாய். அந்தத் தசமுக ராவணனைக் கொன்றது ஒருபெரியதன்று என்றோ ரசரீரி சொலலிற்று. அதைக்கேட்ட இராமன் ஒருகோடி வானரங்கள், தம்பிமார்கள், சுக்ரீவன முதலான சேனைத்தலைவர்கள், அனுமான் முதலிய வீரர்களோடும் சீதாசமேதராய் புறப்பட்டுக் கடற்கரையையடைந்து, இதை நாம் எப்படித் தாண்டப் போகிறோமென்று சிந்தித்து. அனுமானைப் பார்த்து. ஏ, அனுமானே! இதற்குஎன்ன செய்கிறதென்று கேட்பதற்குமுன் அளவிடமுடியாத ஒரு பிரமாண்ட ரூபங்கொண்டார். பின்பு அற்புத பராக்ரமசாலியான அனுமார் ஒரு க்ஷணத்திற்குள் சமுத்திரங்களைத் தாண்டிப் பாற்கடலையடைந்து சதமுகராவணன் வீட்டில் வாலையும் இராமனிருந்த இடத்தில் தலையுமாய்ப் படுத்துக்கொண்டார். அந்த அனுமாராகிய அணையின்பேரில் சேனைகளோடு ஏறிக்கொண்டுபோய், ஏமசிருங்கம்என்னும் பட்டணஞ்சேர்ந்து அக்கினிபோன்ற பாணங்களினல் பட்டணமெல்லாமெரித்துவிட்டார். அதற்குப்பின் இராக்ஷதர்களுக்கும் வானரர்களுக்கும் சொல்லுக்கடங்காத சண்டையுண்டாயிற்று. மிகுந்த சரீரமும் பயங்கரமும் பராக்கிரமுமுடைய வனன சதகண்ட ராவணன் வானரச் சேனைகளையடைந்து ஊங்காரஞ் செய்தான். அதிலுண்டான காற்றினல் இராமன் சேனைகளோடு முப்பது யோசனைதூரம் போய் விழுந்து மூர்ச்சையடைந்தான். பின்பு மூர்ச்சை தெளிந்து பிராணனடைந்து ஒருவர்க் கொருவர் பார்த்தார்கள். அந்த ராக்ஷதராஜனுடைய பயத்தினல் எல்லாரும் பேசாமல் மௌனமாயிருந்ததைக்கண்ட சீதையானவள் பெரிய சரீரமும் ஆயிரம் தலைகளும் இரண்டாயிரம் கைகளுமுடைய

வளாய் வில்லை யேந்திக்கொண்டு, இரதத்தின் மீதிலேறி, யுத்தஞ்செய்து, அந்த ராக்ஷதனையடித்தாள். சீதையும் சத கண்ட ராவணனும் ஒரு மாசம் வரையில் சண்டைசெய்து, பின்பு சீதாதேவி ஞானதிருஷ்டியால்பார்த்து, ஐயா அனு மானே! இந்த ராக்ஷதன் இரேணுகாபூஜையில் சிறந்தவன்: அவள் அனுக்கிரகத்தாலும் வரப்பிரசாதத்தாலும் மிகுந் தவன்: இவன் உயிர்நிலையானது குண்டலி நகரத்தில் தாமரைத்தடாகத்தில் ஒரு தாமரைப்பூவின் சூக்குமமான நூலைப்பொருந்தி, வண்டுகளால் சூழப்பட்டிருக்கிறது. ஏ, அனுமந்தா! நீ உடனே குண்டலி புரஞ்சென்று ஸ்ரீ இரேணுகையின் சிதாக்கினிப் பொடியை யெடுத்துக்கொ ண்டு அத்தாமரைப் புஷ்பத்தையடைந்து, அவ்விடதிலி ருக்கும வண்டுகளை வதைத்து,ஒரு முகூர்த்த காலத்திற்குள் வரல்வேண்டுமென்றதைக்கேட்டு, அனுமான் பாற் கடலிலி ருந்து சமுத்திரங்களைத் தாண்டித், தாமரைக் குளத்தின் சமீபத்திற்சென்றார். அந்த இரேணுகாதேவியானவள் அனுமான்வந்ததைக்கண்டு மாயையினால் * தாமரைக்குளத் தை மறைத்துவிட்டாள். உடனே அதிக வலிமையுள்ள அனுமான் முன்னிருந்ததையும் பின்னிருப்பதையுங்கண்டு இம்மாது தடாகத்தைத்தன் மாயையினால் மறைத்து விட் டாளென்று மிகுகோபங்கொண்டு, ஒருகணப் பொழுதில் இப்பட்டணத்தை மலைகளோடு பிடுங்கிச் சமுத்திரத்தில் போட்டுவிடுகிறேனென்று விஸ்வரூபமெடுத்தார். அவ்வனு மார் முன்னே இரேணுகாம்பாள் இரண்டு முகத்தோடு சூலத்தைக்கையில் பிடித்தவளாய் வந்து நின்றாள். வாயு குமாரனான அனுமான் பர்வதாகாரமாயிருக்கிற இரேணுகை யைக்கண்டு, ஐந்து முகமும் ஐந்து கரமும் பர்வதமும் போ லாய்விட்டான். அந்தத் தேவியும் மூன்று முகமுள்ளவளாய்

* இக்குளம் தாமரை யேரியெனச் சொல்லக்கிடக்கின்றது :—

அனுமானைத் தூக்கிக்கொண்டு போய்விட்டாள். பின்பு அனுமான் பத்து முகமும் அதன்பின் நூறு முகமுமுள்ளவனானன். இப்படியிவர்கள் ஒன்றுக்கொன்றண்டான ரூபவிசேடத்தை அந்த ஆயிரம் நாவுடைய ஆதிசேடனாலும் புகல முடியாது. அனுமான் நூறு முகமானவுடனே குண்டலி நகரத்தைப் பர்வதங்களோடு தூக்கிக்கொண்டுபோக எத்தனித்தான். பின்பு நூறுமுகமுள்ள அனுமானைக்கண்டு அவன் பலத்தை வாங்கிக்கொண்டு நூறு கல் வடிவமாய்ப் போகும்படி சபித்தாள். அவ்வேளை அனுமானும் ஸ்ரீஇராம ஜெய காரியத்திற்கு விரோதமாயிருக்கிற இக்குண்டலி புரமானது மண்மாரி பெய்து அழியக்கடவதுஎன்று சாபங் கொடுத்தான். பின்பு இரேணுகாதேவி அனுமானைக் கொல்லுவதற்கு ஓடிவந்தாள். இச்சங்கதிகளை ஞானக்கண்ணால் ஸ்ரீ இராமன் அறிந்து குண்டலி புரத்திற்குவந்து ஸ்ரீ இரேணுகையையும் அனுமானையும் பார்த்து மதுரவசனங்களைச் சொல்லிச் சமாதானஞ்செய்து கொண்டு, ஏ, இரேணுகா! இந்த இராவண வதமானது சகலருக்கும் பொதுவான தேவ காரியமாயிருக்கின்றது. நீயும் சகாயம்செய்தே தீரவேண்டும். இந்த அனுமான் எனக்குத் தாசன். இவனை ஒரு பொருட்டாக நீ கோபிக்கத்தகாது. இந்தக் கோபரூபத்தை விட்டுவிடு. அனுமானுக்கு முன்போலச் சௌரிய பராக்கிரமங்களைக்கொடு என்ற ஸ்ரீ இராமனைப்பார்த்து ஏ, இராமா! அந்த இராவணன் என்னுடைய பக்தன். பூர்வத்தில் அவன செய்த தவத்தால் என்னால வாங்கெடுக்கப் பெற்றிருக்கிறான். அவனுயிர்நிலை யெப்பொழுதும் என்னால் காப்பாற்றப்பட்டிருக்கிறது. ஆகையால் யாவரும் அவனைக் கொல்லக்கூடாது. இந்த அனுமான்மட்டும் முன்போல் வலியை யடையக்கடவது. இவன் என்முன் நூறு ரூபமாய் வந்தமையால் இவ்விடததில் நூறு சிலாரூபத்

தோடு விளங்கக்கடவன். எனதாலயத்தில் நாடோறும் துவாரபாலகனாக இருக்கக்கடவன் என்றுசொல்லி இரேணுகாதேவி மறைந்தாள். பின்பு ஸ்ரீ ராமனும் அனுமானோடுகூட அதர்வணவேத மந்திரங்களினால் மறுபடியும் தோத்திரஞ்செய்து, ஸ்ரீ இரேணுகாம்பாளை வரவழைத்தான். உடனே இரேணுகாம்பாள் பிரசன்னமாகி யாது காரணத்திற்காக என்னை விரும்பினீர்கள்! உமக்கு மங்களம் உண்டாகக் கடவது. கேட்டவரத்தைக் கொடுக்கிறேன் சொல்லுங்கள் என்றவுடனே ஸ்ரீராமன் களிப்படைந்து பரதேவி! உன்னாலய சமீபத்தில் ஓர் ஆலயங்கொண்டு வசிக்கப்போகிறேன், ஏ தேவி! இந்த ராக்ஷதவதத்தில் உனக்கும் மேன்மைகிடைக்கும், அனுமானால் உனக்கு நேர்ந்த அபகாரமெல்லாம் மன்னிக்கவேண்டும். அவனால் சாபமடைந்த உன்னுடைய பட்டணத்தைக் கலியுகத்தில்நந்தனென்பவன் ஆண்டு சகலபோகங்களையுமனுபவித்துக்கொண்டு வாழப்போகிறான். அந்நந்தன் செய்யுங்கொடுமையால் இந்நகரில் இன்னமொருதரம் * மண்மாரிபொழியப் போகின்றது. இவ்விதம் கலியுகத்தில் நூறு ஆயிர வருடஞ் சென்றபின் பழையபடி மாடமாளிகையோடு விளங்கும். ஆனாலதுவரையில் வருஷந்தோறும் ஆடிமாதத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பட்டணம்போலிருக்கக்கடவது என்று சொல்லி ஸ்ரீராமனும் அனுமானும் ஸ்ரீ இரேணுகாதேவியைத் தோத்திரஞ் செய்தார்கள். அது

---

* மண்மாரி பெய்யும்படி செய்த வசைப்பாடல் வருமாறு:—

ஊருமாவமுந் தாமரைக்காடு முயர் வனமுந்
தேருமுடைத் தென்பர்காண் நந்தியையுனைச் சேர்ந்த பின்பு
ஊருமாவமுந் தாமரைக்காடு முயர் வனமுந்
தேருமுடைத் தென்பர்காண் தெவ்வர்வாழுந் திருநகரே.

முதல் இந்தத்தலத்தில் ஸ்ரீ ராமருடைய ஆலயமும் நிலை பெறறேருங்காநின்றது. அனுமானும் சிலா ரூபங்களாய் இக்காலத்திலுந் தோன்றுகின்றான். அப்போது ஸ்ரீராம னும் அனுமானும் தாமரைக் குளத்திற்குப்போய் வண்டு களை வதைத்து ஸ்ரீ இரேணுகாதேவியால் சதகண்ட ராவ ணனை வதஞ்செய்யும் பொருட்டு வேண்டிய வரங்களைப் பெற்றுக்கொண்டு பாற்கடலில் ஏமசிருங்கமென்னும் பட்ட ணத்திற்குப்போய் அந்தச் சதகண்ட ராவணனையும் அவன் சேனைகளையும் வதைத்துச் சீதை இலக்குமணன் அனுமான் முதலானவர்களோடு குண்டலி நகரத்தை யடைந்து ஸ்ரீ இரேணுகாதேவியைப்பூஜித்துச் சீதாசமேதராய் அயோத் தியாபுரியை யடைந்தார்கள். ஏ, சவுனகாதி முனிவர்களே இந்தப்படி அந்த உத்தம க்ஷேத்திரத்தில் அளவற்ற தீர்த் தங்களும் ஆலயமுமிருக்கின்றன. பூர்வத்தில் தேவாசுரயுத் தத்தில் சகல தேவதைகளும் வந்தார்கள். மஹா தேஜோ மயமாயும் குழந்தையாயுமிருக்கின்ற சுப்பிரமண்யக் கட வுளைத் தேவசேனாதிபதியாய்ச் செய்யவேண்டுமென்னும் விஷயத்தில் குண்டலிபுரத்தில் ஸ்ரீ ரேணுகாதேவி சமீபத் தில் எல்லாரும் வந்து சுப்பிரமணியக் கடவுளுக்குப் பட்டா பிஷேகஞ் செய்தார்கள். அப்பதிவிரதாசிரோமணியான ஸ்ரீரேணுகாம்பாள் வரலாறு சொல்லிறந்த பெருமையையு டையது. அதை ஒருவாறு சுருக்கமாகச் சொன்னேன். பதி னுயிரம் வருடஞ்சொன்னாலும் முடியாது. உலகத்தில் வை சூரியென்னும் அம்மையின் துன்பம அடைந்தவர்களும் துர்மாரியின் பயத்தை யடைநதவர்களும் மற்றவர்களும் இரேணுகாதேவியின் சரித்திரம் ஒருமுறை கேட்பார்களா னால் அவர்கள் விரும்பியவைகளையடைந்து எல்லாச்செல்வங் களோடும் நீண்டநாள் வாழ்வார்கள். அதன்பின் முத்திச் செல்வத்தையும் பெறுவார்கள். ஆனால் ஆலயத்துள் செய்

35
168879

"த்தகாத குற்றங்களைச் செய்கின்றவர்களும், ஆலயத் தொண்டுசெய்ய நாணுகின்றவர்களும், ஆலயப்பொருளை விரும்புகின்றவர்களும், ஊன் முதலியவைகளைத் தின்றாவது, கள் முதலியவைகளைக் குடித்தாவது ஆலயத்துள் நுழைகின்றவர்களும், ஆடு மாடு கோழி முதலியவைகளைப் பலியிடுகின்றவர்களும், மீளாநரகத்தை யடைவார்கள். நல்வினைகளைச்செய்கின்றவர்களுள் எவரேனும் "நாம் எக்காலத்தும் நல்வினையே செய்துகொண்டு வருகின்றோம் நமக்கு ஒரு துன்பமுமில்லை" யென்று செருக்கடைதல் கூடாது. ஏனெனில் எவர்கள் எந்த நல்வினையைச் செய்தாலும் அதைச் செய்யுங்காலத்தில் மனத்தில் அழுக்கில்லாமல் பரிசுத்தமாக இருப்பார்களானால் அது பயனைக்கொடுக்கும். இல்லாவிடில் எந்தப் புண்ணியச் செய்கையும் பலனைக்கொடாது. எந்த நல்வினை செய்வோர்களும் மனத்துள் களங்கமில்லாதவரா யிருத்தல் வேண்டும். முனிவர்களே! நீங்கள் இவைகளையும் இவைபோன்ற பிறமுக்கியமானவைகளையும் மனத்துள் வைத்து ஒழுகல் வேண்டும் என்று சூதமுனிவர் சௌனகாதி முனிவர்களுக்குச் சொன்னவாறே புகன்றேன் மங்களகரமாகிய இந்த நல்லநாளிலே இச் சரித்திரத்தை நிறுத்துகின்றேனெனச் சொல்லி முடித்தார் வசிஷ்ட முனிவர்.

மங்களம். மங்களம்.

முற்றிற்று.

---

## வாழ்த்து

மன்னுறு வேத வேள்வி மழைபசு வறங்கள் செய்யும்
பன்னுநல் லுயிர்கள் செல்வப் படைவேடு தெய்வக்கோயில்
துன்னுறு மிந்நூலோடு துலங்குமுச் சுடர்கள் பூதி
பொன்னுறு மசகு செங்கோல்பொலிவு வாழ்கமாதோ.